

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் விக்கிரவாண்டி பேரூராட்சி நிர்வாகிகளுடன் தேர்தல் பணிக் குறித்து கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி, கழக வேட்பாளர் அன்னியூர் சிவா மற்றும் நெய்வேலி சட்ட மன்ற உறுப்பினர் சபா, ராஜேந்திரன் மற்றும் கடலூர் மேற்கு மாவட்ட ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### அ.தி.மு.க. இடைத்தேர்தல் புறக்கணிப்பு, மறைமுகமாக பி.ஜே.பி.யை ஆதரிப்பதே!

# விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றிக்கு உழைப்போம் !

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 19-

ஜூலை 10 அன்று நடைபெறவுள்ள விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை மிகப்பெரிய அளவில் வெற்றியடையச் செய்ய அர்ப்பணிப்போடு உழைப்போம் - தி.மு.க.வின் வெற்றி நாட்டு மக்களின் வளர்ச்சிக்கானதாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

மக்களவைத் தேர்தல் முடிவுற்ற நிலையில், நாடெங்கும் 13 தொகுதிகளில் இடைத் தேர்தலுக்கான தேதியைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஜூலை 10 அன்று விக்கிரவாண்டி தொகுதியில் சிறப்பாக செயல்பட்ட தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி அகால மரணமடைந்த நிலையில், அத்தொகுதியில் ஜூலை 10 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. வேட்பாளராக அன்னியூர் சிவா அறிவிக்கப்பட்டுள்ளார். தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகள் தி.மு.க. வேட்பாளர் வெற்றிக்கு ஆக்கப்பூர்வமான முன்னெடுப்புகளை மேற்கொண்டு விட்டன.

**அ.தி.மு.க. இடைத்தேர்தலைப் புறக்கணிப்பது அதன் பலகீனத்துக்கான அறிகுறியே!**

எதிரணியைப் பொறுத்தவரை பா.ம.க. சார்பில் பி.ஜே.பி. கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். பிரதான எதிர்க்கட்சியான எடப்பாடி பழனிசாமியைப் பொதுச்செயலாளராகக் கொண்ட அ.தி.மு.க. இந்த இடைத்தேர்தலைப் புறக்கணித்திருப்பது - அது ஓர் அரசியல் கட்சி என்ற நிலைப்பாட்டுக்கான கடமையை நிறைவேற்றுவதிலிருந்து பின்வாங்குவது உள்நோக்கம் கொண்டது என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இது அக்கட்சிக்கான தோல்வியின் அச்சத்தைப் புலப்படுத்துகிறது. அக்கட்சித் தொண்டர்கள் மத்தியில் மட்டுமல்ல, பொதுமக்கள் மத்தியில், வாக்காளர்கள் மத்தியில் அ.தி.மு.க.வுக்கு இருப்பதாகக் கூறப்படும் பொது மதிப்பையும் இழக்க நேரிடும் என்பதில் அய்யமில்லை.

**பி.ஜே.பி.,க்கு மறைமுக ஆதரவா?**

அ.தி.மு.க. இடைத்தேர்தலைப் புறக்கணித்திருப்பது - பல அய்யப்பாடுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்பதில் அய்யமில்லை. நடந்து முடிந்த 18 ஆவது மக்களவைத் தேர்தலில்கூட பி.ஜே.பி.யோடு அ.தி.மு.க. கூட்டணியை முறித்துக் கொண்டிருந்தாலும், தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் மோடியை விமர்சிக்கவில்லை. இதனை தி.மு.க. உள்ளிட்ட எதிர் அணியினரும் தேர்தல் நேரத்திலேயே சுட்டிக்காட்டி, விமர்சனம் செய்தனர்; தொலைக்காட்சிகளின் விவாதங்களிலும் இந்தக் கருத்து விளாசப்பட்டது.

மறைமுகமாக பி.ஜே.பி., - பா.ம.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்கும் நிலைப்பாட்டை அ.தி.மு.க. எடுக்கும் என்று வாக்காளர்கள் கருதுவதைத் தவிர்க்க முடியாது.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பி.ஜே.பி. கூட்டணியும், அ.தி.மு.க. கூட்டணியும் பெரும் தோல்வியைச் சந்தித்த நிலையில், எப்படியாவது ஓடும் பி.ஜே.பி. கூட்டணி ரயிலில் தொற்றிக்கொண்டு பயணம் செய்யலாம் என்ற முடிவுக்கு அ.தி.மு.க. வந்துவிட்டதாகவே கருதுவதற்கு அழுத்தமான நியாயங்கள் உண்டு.

**பா.ம.க. பாடம் பெறும்!**

வெகுமக்கள் வெறுப்பை மலையளவு சம்பாதித்து வைத்துள்ள ஒன்றிய பி.ஜே.பி. அரசு ஓடத்தில் பயணித்த பா.ம.க. பட்டும் பாடம் கற்கவில்லை என்பது பரிதாபமே! சமூகநீதியில் பா.ஜ.க.வின் நிலைப்பாடு என்னவென்று தெரியாதா? 'நீட்'டைத் திணிப்பதன் பின்னணியைப் பா.ம.க. அறிய மாட்டாதா? இடபுள்யூஎஸ். திட்டம் என்பது யாரைக் கொழுக்க வைக்க என்ற அரிச்சுவடி பாடம் பா.ம.க.வுக்குத் தெரிந்த ஒன்றுதானே!

ஜாதிவாரி கணக்கெடுப்பை வலியுறுத்தும் பா.ம.க. அதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்துத் தேர்தலில் போட்டியிட்டால், பா.ம.க.மீது தமிழ்நாட்டு மக்களின் நம்பகத்தன்மை எப்படி இருக்கும்? தந்தை பெரியாரின் சமூகநீதி மண் - பா.ம.க.வின் இந்த நிலைப்பாட்டை ஜீரணித்துக் கொள்ளுமா? "கரடி என்று தெரியாமல் கம்பளிப் போர்வை என்று கட்டி அணைத்தவரின்" கதிக்குத்தானே பா.ம.க.வும் ஆளாகும்.

பா.ம.க.வை வெகுமக்கள் புறக்கணிப்பார்கள் என்பதில் அய்யமில்லை! பா.ம.க. கூறி வரும் எந்தக் கொள்கைக்கும் விரோதமான பி.ஜே.பி.யோடு கூட்டு வைத்துத் தேர்தலில் போட்டியிட்டால், தமிழர்கள் முற்றிலுமாக பா.ம.க.வைநிராகரிப்பார்கள் என்பது சுவர் எழுத்தே!

ஊழலைப்பற்றி எல்லாம் பேச முடியாது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊழல்பற்றி சி.ஏ.ஜி. அறிக்கை என்ன கூறுகிறது? 7.5 லட்சம் கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளது என்று கூறவில்லையா? தி.மு.க.வை எதிர்த்து நிற்கும் பா.ம.க.வின் எந்தப் பிரச்சாரமும் எடுபடப் போவதில்லை.

இந்திய அளவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் உயர்ந்து நிற்கும் பிம்பம்!

சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிம்பம் இன்றைக்கு இந்தியா முழுமையும் செம்மாந்து நிற்கிறது. இந்தியா கூட்டணி என்ற கட்டமைப்பின் முதுகெலும்பாகவும் திகழ்கிறார். தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. ஆட்சி நாளும் நாளும் வளர்ச்சித் திட்டங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், தி.மு.க.வை எதிர்த்து வெற்றி பெறுவது என்பது முயற்கொம்பே!

"மக்கள் நல அரசு" (Welfare State) என்பதற்கு இலக்கணமாகத் திகழும் தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை எடைபோட்டுப் பார்த்து மிகப்பெரிய வெற்றியை விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வெகுமக்கள் தி.மு.க.வுக்கு அளிப்பார்கள் என்பதில் எள்ளளவும் அய்யப்பாட்டிற்கு இடமில்லை.

சமூகநீதிதான் எங்கள் உயிர்மூச்சு என்று தொடக்கத்தில் சொன்னவர்கள்!

பெரியாரையும், காரல் மார்க்சையும் படம் போட்டு "அனைவருக்குமான சமூகநீதிதான் எங்கள் உயிர்மூச்சு" என்று தொடக்கத்தில் கூறி, மக்களிடையே அறிமுகமான பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் அல்ல; பெயரளவுக்கு அப்படியிருந்தாலும், அது பா.ஜ.க.வின் மாயக்குதிரை - ஜாதிவாரிக் கணக்கெடுப்பை பிரதமர் மோடியிடம் வற்புறுத்தி பெற முடியாத நிலையில் உள்ள நிதிஷ் குமாரின் கூட்டாளியான பாட்டாளி மக்கள் கட்சி என்ற பெயரில் உள்ள உருவம்மாறி அங்கே உலா வரும் பா.ஜ.க. தி.மு.க. வேட்பாளர் வெற்றிமூலமே சமூகநீதியைக் காப்பாற்ற முடியும்!

அ.தி.மு.க., விக்கிரவாண்டி இடைத்தேர்தலைப் புறக்கணித்ததாகச் சொல்லி, 'வீரவசனம்' பேசுவது, பா.ஜ.க. அணிக்கு உதவிட, உத்தரவுக்குக் கீழ்படிந்த பா.ஜ.க.வின் மறைமுக - "மாயக்குதிரைகளே", "மாயமான்களே" என்பதை வாக்காளர்கள், குறிப்பாக மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூக வாக்காளர்கள் உள்பட அனைவரும் உணர்ந்து, உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் வெற்றி மூலமே சமூகநீதியைக் காப்பாற்ற முடியும்.

**மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவு!**

இட ஒதுக்கீட்டினால் பெரிதும் பயன்பெற்றவர்கள் வன்னியர்கள்! கலைஞரின், மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவு இட ஒதுக்கீட்டினால் பெரிதும் பயன்பெற்றவர்கள் வன்னியர்கள். மருத்துவம், பொறியியல் பட்டப் படிப்புகளில் ஏராளமானோர் இடம் பெற வாய்ப்பு ஏற்படுத்தியது - தி.மு.க.தானே தவிர, காவிகளோ அல்லது வேறு கபடதாரிகளோ அல்ல!

அதுமட்டுமா? போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்த பா.ம.க. குடும்பங்களுக்கு, அரசின் உதவித்தொகை பெற்றுத் தந்த அரசியல் பெருந்தகை முதலமைச்சர் கலைஞர் என்பதை மறக்கலாமா?

**ஆதரவுக்கரத்தை நீட்டுவோம் – வெற்றியை நிலைநாட்டுவோம்!**

தி.மு.க. தலைவராகத் தேர்வு செய்யப்பட்டபோது "நான் புதிதாகப் பிறந்திருக்கிறேன்" என்றார் தளபதி மு.க.ஸ்டாலின் (21.8.2018). அது வெறும் அழகு வார்த்தையல்ல - அர்த்தமிக்க ஆழமான பொருளைக் கொண்ட பிரகடனம்! மேலும் மேலும் அவருக்கு ஆதரவுக் கரத்தைப் பலமாக நீட்ட நீட்ட, நாட்டு மக்கள் நற்பலனை அடைந்து கொண்டே இருப்பார்கள்.


விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய திராவிடர் கழகத்தின் பங்களிப்பு சிறப்பானதாகவே இருக்கும். கழகத் தோழர்கள் அர்ப்பணிப்போடு பணியாற்றுமாறு வலியுறுத்துகிறோம். தி.மு.க. வெற்றி என்பது வெறும் ஒரு கட்சியின் வெற்றியல்ல - நாட்டு மக்களின் நன்மைக்கான - வளர்ச்சிக்கான - உரிமைக்கான மக்களின் பொது நலத்திற்கான வெற்றி என்ற வீர வரலாறு தொடரும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கல்வராயன் மலை ஊராட்சி ஒன்றியம் மேல்பாச்சேரி ஊராட்சி எழுத்தூர் மற்றும் மேல்பாச்சேரி பகுதிகளில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார், உடன் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள்,ஒன்றிய கழக செயலாளர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கலைஞர் எனும் திராவிட விழுமியம்!



தனிமனிதர் தனிப் பெருந்தலைவர் என்று எவர் ஒருவரை பற்றியும் கட்டுரை எழுதிட எத்தனித்தால், அதிகபட்சம் அரை மணிநேரம் போதும். மனதிற்குள் அவரைப் பற்றிய தனிமனித தகவல்கள், பின்னர் அவர் எந்த தளத்தில் சிறந்து விளங்கினாரோ, அதில் அவருக்கென்ற சிறப்பியல்புகளை நமக்கு தெரிந்த தமிழ் மொழியில் அழகாய் எழுதிட முடியும். ஆனால், தலைவர் கலைஞர் பற்றி எழுதிட முனைந்திட்டால், எதில் துவங்கி, எதைப்பற்றி எழுதி எப்படி நிறைவு செய்வது? என்று சிந்தித்து முடிவெடுக்கவே சில மணி நேரங்கள் ஆகும்.

ஏனெனில் 14 வயதினிலே அவருக்கு சுயமரியாதை மற்றும் மொழியுணர்வு மேலெழுந்ததன் விளைவாக எழுத்து, நாடகம், பேச்சு என்று பன்முகத்தன்மையும் துளிர்விட்டு வளர்ந்து வரலாறாயிற்று. எனவேதான், தலைவர் கலைஞரைப் பற்றி எழுதும் முன்பு அவரின் பல பரிமாணங்களில் எந்த பரிமாணத்தை எழுதுவது? என்று தீர்மானிப்பதே ஒரு சாமானிய எழுத்தாளனுக்கு இயலாத காரியமாகிப் போகின்றது. ஆனாலும், தலைவரின் நூற்றாண்டு நிறைவில் அவரின் கொள்கை அரசியலைக் கோடிட்டு காட்டிட எத்தனித்த பொழுதில்...

தமிழர் தம் வாழ்வியல் வரலாற்றில் ஐந்திணை நிலவழி ஒழுக்கம் இருந்த காலந்தொட்டே அகம், புறம் என்ற இருபெரும் அறங்களின் ஊடேதான் தங்கள் வாழ்வியலை கட்டமைத்துக் கொண்டதாக, இருபதாம் நூற்றாண்டின் தமிழறிஞர்களான, மறைமலை அடிகள், தேவநேய பாவாணர், சீனிவாச ஐயங்கார் அப்பாதுரையார் போன்றோர் தங்கள் படைப்புகளில் பதிவு செய்துள்ளனர். அகம் என்பது தனிமனித இல்வாழ்க்கை சார்ந்தும், புறம் என்பது பொதுவழி சமூகம் சார்ந்ததாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது. புற ஒழுக்கத்தின் ஒரு கூறுதான் ஆட்சியதிகார அரசியல்.

உலக அரசியல் வரலாற்றில் மன்னராட்சி நடந்த எந்த மண்ணுக்கும் இல்லாத தனிப்பெரும் சிறப்பு தமிழ் மண்ணுக்கு உண்டு. ஏனெனில், மன்னராட்சி என்பது, "மன்னர் இட்டதே கட்டளை...கட்டளையே சாசனம்" என்று ஏனையோர் வாழ்ந்த போது தமிழ் மண்ணில்தான் அரசர்கள், வாரிசு அடிப்படையில் வந்து அரியணை ஏறினாலும், ஆட்சியின் திசைவழிப் பயணத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவுசார் ஒழுக்க சீலர்களான ஊர் சபை, சிற்றூர், பேரூர், மூதூர் உறுப்பினர்களும், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட திறமையான ஐம்பெருங்குழு, எண்பேராயம், அமைச்சர்கள், அறிஞர்கள் போன்ற மேன்மக்களே தீர்மானித்தனர். இவர்கள் அனைவரும் மக்களோடு மக்களாக வாழ்ந்த காரணத்தினால் பொது மக்கள் தேவையை அறிந்து, தேவையின் அடிப்படையில் அரசின் திட்டங்களை அரசியல் கோட்பாடுகளாக நிர்மானித்தனர். இவ்விதமாக, மன்னர் தலைமையில் மக்களாட்சி நடத்திய மாண்பு தமிழர்தம் அரசியல் சிறப்பு. காலந்தோறும் ஆட்சி பரிபாலனங்கள் மாறுபட்டு வந்தாலும், அடிப்படைக் கொள்கைகளில் மக்கள்நல அரசாகவே பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. ஒரு நிலப்பரப்பில் வாழும் இனக்குழு மக்கள், அரசியல், பண்பாட்டு கலாச்சார ஒழுக்க நெறிமுறைகளில், தாங்கள் ஒத்துக்கொண்ட தத்துவத்தையும், அதன் அடிப்படைக் கூறுகளையும் காலந்தோறும் மேன்மைப்படுத்தி, அதைப் பின்பற்றுவதால், பெருமிதம் கொள்ளத்தக்க, மதிப்புமிக்க (Value)உன்னதமான கோட்பாடாக, நிலை நிறுத்தியவைதான் விழுமியங்கள் ஆகும்.

இப்படி, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், 1929ல், பிப்ரவரி 17, 18ம் தேதிகளில், செங்கல்பட்டு மாநாட்டில், ஐயா பெரியார் வகுத்துத் தந்த அரசியல் தத்துவம்தான் "திராவிடம்". இத்தத்துவத்தின் அடிப்படைக் கூறுகளான, சுயமரியாதை, சமூகநீதி, பெண்ணுரிமை, சமத்துவம், சமதர்மம் ஆகியவற்றைநடைமுறைப்படுத்தி, நிலைநிறுத்தி, திராவிட விழுமி யங்களாய் மாற்றியதில் தலைவர் கலைஞருக்கு பெரும்பங்குஉண்டு. ஏனெனில், ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு கால(94 வயதில் 80 ஆண்டுகள் பொது வாழ்வு) பொது வாழ்வில் வெற்றி, தோல்வி எதைப் பற்றியும் கவலைப்படாமல் கொண்ட கொள்கையை முன்னெடுத்து நடை முறைப்படுத்தி நிலை நிறுத்தியவர் தலைவர் கலைஞர்.

**பேரா.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**
*கழக செய்தித் தொடர்புச் செயலாளர்*



பேரறிஞர் அண்ணா தலைமையில் 6.3.1967ல், தி.மு.க. ஆட்சி அமைத்து இம்மண்ணுக்கு தமிழ்நாடு என்ற பெயர்சூட்டி, சுயமரியாதை திருமணங்களை அங்கீகரித்து, தமிழும், ஆங்கிலமும்தான் ஆட்சி மொழிகள் என்று 'இருமொழி கொள்கையை'நிலைநிறுத்தி,இம் மண்ணுக்கான அரசியலை முன்னெடுத்த பேரறிஞர் அண்ணா3.2.1969ல், நீள்துயில் கொண்ட நிலையில், 10.3.1969ல், தலைவர் கலைஞர் தலைமை பொறுப்பேற்று முதல் அண்ணா விட்டு சென்ற பணிகளை சிரமேற் கொண்டு ஆட்சி நடத்தலானார்.

திராவிட தத்துவத்தின் அடிப்படைக் கொள்கையான சுயமரியாதையை நிலைநிறுத்திட வேண்டி பல்வேறு திட்டங்களை தீட்டினார். சுயமரியாதை என்பது யாரொருவரும் இன்னொருவருக்கு உயர்ந்தவரும் இல்லை தாழ்ந்தவரும் இல்லை என்ற சுயமதிப்பீட்டின் மீதான நம்பிக்கையாகும். இவ்வுணர்வை சாமானியர்கள் முதல் சீமான்கள் வரை உணர்ந்திடும் பொருட்டு, 3.6.1973 ல்,'கை ரிக்சா ஒழிப்பு' திட்டத்தின் மூலம் மனிதனை வைத்து மனிதனே இழுக்கும் அவமரியாதையை அகற்றிட முனைந்தார். பொதுவெளியிலே, பிழைக்க வழியின்றிபிச்சையெடுத்து திரிந்தவருக்கு, 'பிச்சைக்காரர் மறு வாழ்வு திட்டம்'தந்து, இழந்த சுயமரியாதையை ஏழை எளியவருக்கு மீட்டு தந்தார். 'ஏழை சொல் அம்பலம் ஏறுமா?'என்ற அங்கலாய்ப்பு அடைமொழிக்கு விடை தரும் பொருட்டு, ஏழை எளியவர்கள் வாழும் குடிசை வீடுகளை மாற்றி, கல் வீடு கட்டித்தர, 'குடிசை மாற்று வாரியம்' 15.9.1970ல் தந்தார். சமூகத்தின் மாற்றத்திற்கு வித்திட்டு கொண்டே, அரசியல் ஆட்சி முறையில் ஒன்றிய அரசு உயர்வாகவும், மாநில அரசு தாழ்வாகவும் பார்க்கப் பட்டதை மாற்றி, மாநில அரசின் சுயமரியாதையைக் காத்திட மாநில சுயாட்சி உரிமைக்காக19.8.1969ல், சட்ட மன்றத்தில் அறிவித்து, 22.9.1969ல், அரசாணை பிறப்பித்து, நீதியரசர் ராஜமன்னார் தலைமையில், லட்சுமண முதலியார், சந்திரா ரெட்டியார் அடங்கிய மாநில சுயாட்சி கமிட்டி அமைத்து, இரு அரசுக்கும் இடையிலான அதிகார சமத்துவத்தை உருவாக்கிட முனைந்தார். அந்தக் குழுவும் ஒன்றிய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை அலசி ஆராய்ந்து, 27.5.1971ல் அறிக்கையை சமர்ப்பித்தது. அதைத்தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, 16.6.1974ல், சட்டமன்றத்திலும் மேலவையிலும் விவாதிக்கப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி, அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் தலைவர் கலைஞர் அவர்கள் ஒப்படைத்தார்.

அதோடுநில்லாமல், குடியரசு தினம், சுதந்திர தினம் இரண்டிற்குமே ஆளுநர்தான் தேசியக் கொடியேற்றிட வேண்டும் என்ற நிலையினை மாற்றி, 15.8.1974 முதல், சுதந்திர தினத்தன்று மாநில முதல்வர் கள் தேசியக் கொடியேற்றிடும்உரிமையை இந்தியா முழுமைக்கும் பெற்றுத் தந்த பெருமை தலைவர் கலைஞரையே சாரும்.

பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்து, கல்வி உரிமை, பொருளாதார உரிமை, வாழ்வுரிமை என்ற மனித உரிமைகள் அனைத்தையும் மறுத்து, சமூகத்தின் பெரும் பகுதி மக்களை, மிருகங்கள் போல் வாழ வைத்துக் கொண்டிருந்த நேரத்தில், இழந்த உரிமைகளை மீட்டெடுப்ப தற்கான தீர்வுதான் சமூகநீதி. கல்வியும், வேலை வாய்ப்பும் அனைவருக்கும் கிடைத்திடும் பொருட்டு, இட ஒதுக்கீட்டு முறை உருவானது. தலைவர் கலைஞர் 13.11.1969ல், சட்டநாதன் கமிட்டி அமைத்து பிற்படுத் தப்பட்டோருக்கு 25% லிருந்து 31% ஆகவும், தாழ்த்தப் பட்டோருக்கு 16% லிருந்து 18% ஆகவும் இடஒதுக்கீட்டில் இடங் ங்களை அதிகரித்தார். அதோடு, மார்ச் மாதம் 1989 ல், மிகவும் பிற்படுத்த ப்பட்டோருக்கு 20% இடஒதுக்கீடும், பழங்குடியினருக்கு தனியாக 1% சதவீத இடஒதுக்கீடும், 15.9.2007ல் முஸ்லிம்களுக்கு 3.5% இடஒதுக்கீடும், தாழ்த்தப்பட்ட அருந்ததியினர் சமூகத்திற்கு 27.2.2009 ல் 3% இடஒதுக்கீடும் வழங்கினார். சமூகத்தின் சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் பெண் காவலர்களை நியமித்து 1973ல் ஆணைப் பிறப்பித்தார். அரசு வேலைவாய்ப்பில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு ஆணை 1989ல் பிறப்பித்தார். 1989ல், ஒன்றியஅரசில்வி. பி. சிங்தலைமையிலான ஆட்சி இருந்தபோது இந்திய முழுவதும் கல்வியில் பிற்படுத்தப் பட்டோருக்கு 27% இடஒதுக்கீடு தரும் மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்த முழுமுதற்காரண மாக இருந்து இந்திய முழுமைக்கும் சமூக நீதியைக் கொண்டு சேர்த்த பெருமை தலைவர் கலைஞரையே சாரும். இதுபோன்ற சமூக நீதிகாக்கும் இன்னும் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி தமிழக அரசியலில் சமூகநீதியை, தமிழக அரசியலின் அடிப்படைக் கூறுகளின் முதன்மையானதாக மாற்றினார்.

ஆண்டாண்டு காலமாக,'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?'என்று சொல்லி அடிமைகளாகவே நடத்தப் பட்டு வந்த பெண்களை அடிமைத்தளையில் இருந்து விடுவித்து, சுதந்திர சிந்தனையோடு வாழ்வதற்கு, 'கல்வி ஒன்றே அற்றம் காக்கும் கருவி' என்பதை நிரூபிக்கும் பொருட்டு, பெண் கல்வியை ஊக்குவிக்க 1989ல், எட்டாம் வகுப்பு படித்த பெண் பிள்ளைகளுக்கு திருமண உதவித்தொகை ரூ.5000/ என்று அறிவித்து, பின்னாளில் அது ரூ.10,000/ , ரூ.25,000/ என்று உயர்ந்து, முதுகலை படிப்பு வரை பெண்களுக்கு இலவச கல்வி என்று வளர்ந்து, இன்று ஆண் பிள்ளைகளை விட, அதிகமாக பெண்பிள்ளைகள் கல்வி கற்கும் சூழல் உருவாகியுள்ளது. பெண்களை தொழில்துறையில் முன்னேற்றிடும் பொருட்டு 1989ல், 'மகளிர் சுய உதவி குழுத்திட்டத்தை' தர்மபுரியில் துவக்கி வைத்தார். ஒரே தந்தையின் வயிற்றில் பிறந்த ஆண் பிள்ளைக்கு இருந்த சொத்துரிமை, பெண் பிள்ளைகளுக்கு இல்லாதிருந்த நிலையினை மாற்றி, சொத்தில் சமபங்கு உரிமை சட்டத்தினை இயற்றினார். கல்வி, பொருளாதாரம் மட்டுமல்லாது அதிகார பகிர்வின் பொருட்டு உள்ளாட்சி பதவிகளில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு தந்து 1996ல் சட்டம் இயற்றினார். பெண்களின் உரிமைகளை நிலைநிறுத்தி, சரி நிகர் சமான வாய்ப்புகள் வழங்கி, 'ஆணுக்கு பெண்ணிங்கு இளைப்பில்லைகாண்' என்ற முற்போக்கு நிலை உருவாக எண்ணற்ற திட்டங்கள் தீட்டி, பெண்ணுரிமையும் அடிப்படைக் கூறு என்பதை அழுத்தம், திருத்தமாக மெய்ப்பித்தார்.

இவ்வாறு, சமூகத்தின் ஒவ்வொரு படிநிலையிலும், ஏதோ ஒரு வகையில் புறந்தள்ளப்பட்டு, பின்தங்கியிருந்த சமூகங்கள் எல்லாம் முன்னேறி சமத்துவம் காணும் பொருட்டு,ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், சாதிமத பேதமற்று சேர்ந்து வாழ சமத்துவபுரம், விதைத்து உழைத்து விளைவித்த உழவனே விலை நிர்ணயம் செய்ய உழவர் சந்தை, நகர்ப்புற வசதிகளை கிராமங்களும் நுகரும் வண்ணம் அவற்றிற்கு சாலை மற்றும் போக்குவரத்து வசதி, அனைத்து கிராமங்களுக்கும் மின்சார வசதி, 'எல்லோருக்கும் எல்லாமும்' என்ற சிந்தனையோடு மாநிலம் முழுவதும் பொதுவினியோகத் திட்ட விரிவாக்கம், பெரும்பணக்காரர்களுக்கே கிடைத்து வந்த மருத்துவ சேவையை ஏழைகளும் பெறும் வண்ணம் கலைஞர் காப்பீட்டுத் திட்டம், அதற்கு ஏதுவாக, 108 இலவச ஆம்புலன்ஸ் சேவை, ஏழைகளும் தொழில் அதிபராக சிப்காட், சிட்கோ தொழிற்பேட்டைகள், எதிர்கால தமிழகத்தின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் தகவல் தொழில்நுட்ப கொள்கை 1997 என அனைத்துத் துறைகளின் பல்வேறு தொலைநோக்கு திட்டங்களை தலைவர் கலைஞர் நிறைவேற்றிக் காட்டியதன் விளைவாக சமத்துவ, சமதர்ம கொள்கைகளும் அடிப்படைக் கூறுகளாக நிலை நிறுத்தப்பட்டது.

இந்த மண் பெரியார் மண் என்று சொல்லுவதில் ஒரு பெருமிதமும், இந்த தத்துவத்தின் அடிப்படையில் இயங்குகிற ஆட்சி முறையை, 'திராவிட மாடல்' என்றும் 'இந்தியாவிற்கே முன்மாதிரியான' தத்துவமாக திராவிட அரசியலை ஒரு விழுமியமாக நிலைநிறுத்திய பெருமை பெருமளவு தலைவர் கலைஞரையே சாரும்.